2014 ஆகஸ்ட் 4]

குறைந்த தேர்ச்சி சதவிகிதம் பெற்றதற்கான காரணங்கள் ஆராயப்பட்டு, வரும் கல்வி ஆண்டிலே முழு அளவில் தேர்ச்சி சதவிகிதம் உயர்வதற்கான 'வெற்றி உங்கள் கையில்' என்ற புதுமையான திட்டத்தினைக் கடந்த ஆண்டு முதல் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் இதுவரை இல்லாத அளவுக்கு 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் சென்ற ஆண்டிலே 90.7 சதவீதமாகவும், இதேபோன்று 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்விலே 90.6 சதவிகிதமாகவும் தேர்ச்சி சதவிகிதம் உயர்ந்து உள்ளது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாவட்டத்திற்கு ஒரு மையம் வீதம் ஏற்பாடு செய்து முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக வினாக்கள்—விடைகள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே, பாடப் புத்தகங்கள் எல்லாம் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா வங்கிப் புத்தகம் இலவசமாக வழங்குவதற்கு கோரிக்கை வைத்துள்ளார்கள். இக்கோரிக்கையானது கொள்கை முடிவிலானது. ஆகவே, இந்தக் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 328, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

328—

மாசுக் கட்டுப்பாடு குழு

***27539—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக அனைத்து ஊராட்சிகளிலும் மாசுக் கட்டுப்பாடு குழுவினை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் புனித பாதங்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு, மாவட்ட சுற்றுச்சூழல் குழு ஒன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்துவதற்காக அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் அந்தந்த மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளரை ஒருங்கிணைப்பாளர்களாகக் கொண்டு, அந்தப் பகுதியினுடைய மக்கள் பிரதிநிதி, உள்ளாட்சிப் பிரதிநிதிகள், தன்னார்வ நிறுவனங்களின் சார்பில் 3 பிரதிநிதிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆய்வகங்களின் சார்பாக 3 பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்த பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவை அமைத்து, கண்காணிக்க மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, அனைத்து ஊராட்சிகளிலும் தனியாக மாசுக் கட்டுப்பாடு குழுவினை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் இன்று வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் அதிகமாக வளர வேண்டும், பல்வேறு திட்டங்களைக் கொடுக்க வேண்டும். தூய்மையான கிராமம், தூய்மையான தமிழகம் என நாட்டு மக்களின் வளர்ச்சி மாசு இல்லாமல், சுத்தமான தண்ணீர், சுத்தமான உணவு வழங்குவது தமிழகத்தில் மிகவும் தேவை. இன்னும், தமிழகத்திலே பல பகுதிகளிலே மாசுக் கட்டுப்பாடு சரியாக இல்லாத நிலையுள்ளது. மக்களும் கட்டுப்பாடு இல்லாமல் குப்பைகளையும், கழிவுகளையும் பொது இடங்களில் கொட்டி, அதனால் மாசு ஏற்பட்டு பல்வேறு சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, வியாபார ஸ்தலங்கள், மருத்துவமனைகள், பொதுக் கழிப்பிடங்கள், நீர்நிலைகள், பேருந்து நிலையங்களில் ஏற்படுகின்றன. மேலும், மக்கள் அதிகமாக வாழும் கிராமப் பகுதிகளில்கூட மாசுக் கட்டுப்பாடு நிதியம் அமைப்பது

2014 ஆகஸ்ட் 4]

மிகவும் அவசியம் என்பதால் முதற்கட்டமாக கிராமங்களில் மக்கள் மாசில்லாமல் வாழ்வதற்கு வசதியாக ஊராட்சிகளில் மாசுக் கட்டுப்பாடு குழு அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். எனவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

முற்பகல் 11-35

வெளிநாடுகளில், வளர்ந்துவருகின்ற நாடுகளில் ஓய்வு பெற்ற அதிகாரிகள்கூட மாசில்லாமல் நகரங்களை அமைப்பதற்குத் தானாகவே முன்வந்து தார்மீக எண்ணத்துடன் அந்தப் பணிகளைச் செய்து வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிராமங்கள்தோறும் ஊராட்சிகளில் மாசுக் கட்டுப்பாடு குழு அமைக்க முன்வருவதற்கு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் துறையைத் தமிழகத்தில் உருவாக்கியதே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியமானது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான உத்தரவைப் பெற்று பல்வேறு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிற காரணத்தாலே, இன்றைக்கு கழிவுநீர் அகற்றுவதைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே தமிழகம் முன்னுதாரண மாநிலமாகத் திகழ்கிறது. திருப்பூரில் பூஜ்ஜிய கழிவுநீர் திட்டத்தைக் கொண்டு வந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தொழிற்சாலைகளிலிருந்து வரக்கூடிய புகையின் மாசுவைக் கண்காணிப்பதற்காக இன்றைக்கு இ.எஸ்.பி. என்று சொல்லக்கூடிய கருவிகளைப் பொருத்தி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக அன்றாடம் மாசுவையும்,

புகையையும் கண்காணிக்கும் திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் இயங்குகிற மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். மாவட்ட வாரியாக மாசுக் கட்டுப்பாடு வாரியக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆக, ஊராட்சி வாரியாக இருக்கக்கூடிய குறைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்தந்தப் பகுதிகளில் ஊராட்சி வாரியாக "அம்மா குறை தீர்ப்பு முகாம்" நடைபெறுகிறபோது, அப்பகுதியிலுள்ள குறைகளை மனுக்களாகத் தருகின்றபோது, அந்த மனுக்கள் மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு அனுப்பப்பட்டு அந்தத் துறையினுடைய அதிகாரிகளின் மூலமாக குறைகளைக் கண்காணிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான மாசுக் கட்டுப்பாடு வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 329, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

329—

மருத்துவமனைக் கட்டடம்

***50561—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 2,000 படுக்கை வசதி ஏற்படுத்தவும், இதய நோய் சிகிச்சைப் பிரிவிற்குப் புதிய கட்டடங்கள் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS